# நீலகேசியில் நியதிவாதம்

சு. முகுந்தன்

பிரபஞ்ச இயற்கையின் இருப்பு, அதன் நகழ்ச்சி நிரல்களின் ஒழுங்கமைவு, சமநிலை இவற்றுக்கான ஆதி கார ணத்தைக் குறித்த ஆராய்ச்சிகள் ஆதிகாலந்தொட்டே மனித சமுதாயத்தில் இடம்பெற்றுவந்துள்ளன.

உலகின் மூத்த இலக்கியமான ரிக்வேதத்திலும் இத்தகைய ஆசங்கை களுக்கான ஆதர்சமாக “ரிதம்”- நியதி பற்றிய விளக்கம் அமைந்தது.

ஞான நாட்டம் மிக்கவர்களாக உலக தத்துவ வரலாற்றில் தங்களை அடையாளப்படுத்திவிட்ட கிரேக்கர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. ஆதிகிரேக்கச் சிந்தனையாளர்களான மைலீசியச் சிந்தனைப்பள்ளிக்குரிய இயற்கை மெய்யியலாளர்களும் இதனைப் பற்றியே அதிகம் விவாதித்துள்ளனர்.

இயற்கையின் இருப்பும் அதன் எண்ணரிய நிகழ்ச்சிகளிடையே அவதானிக்கப்பட்ட முறைதவறா ஒழுங்கும் தொடர்ச்சியுமே காரண காரிய ஆராய்ச்சியில் ஆழமாக ஈடுபடுவதற்கு மனிதனைத் தூண்டின எனலாம். உலக வரலாற்றில் எண்ணரிய மெய்யியற் கொள்கைகளும் சமயங்களும்

உதயமாவதற்கான ஊடுபாவாக இயற்கை பற்றிய பேராச்சரியமே விளங்கியது எனலாம்.

காலப்போக்கில் காரண காரிய ஆராய்ச்சி கூர்மையுற்றது. சத்காரணவாதம், சத்காரியவாதம், நியதிவாதம், சுபாவவாதம், ஆரம்பவாதம் என இந்திய தத்துவ மரபிலும் இதன் பரிமாணங்கள் விரிந்தன.

பதில் சொல்ல முடியாத சில கேள்விகளுக்கான உடனடித் தீர்வாக கன்மக் கொள்கையும், விதி பற்றிய விவரணங்களும் விசுவரூபம் பெற்றன. கடவுளை ஏற்காத சில கோட்பாடுகளும் கன்மத்தை ஏற்றுக்கொண்டன. ஒட்டுமொத்தத்தில் இயற்கையிடம் ஏதோ ஒரு இயல்பிறந்த ஆற்றல், தோற்கடிக்க முடியாத தொழில்நுட்பம் உள்ளது என்பதனை எத்தகைய கோட்பாட்டு வாதியும் ஏதோ ஒரு புள்ளியில் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டியிருந்தது.

நவீன அறிவியலாளர்களும் பிரபஞ்ச இயற்கையிடமுள்ள ஆற்றல்கள் அனைத்தையும் இரண்டு நிலைகளில் தொகுத்துச் சுட்டுவர்.

1) இயங்குமாற்றல் (Dynamic Energy)
2) நிலைத்த ஆற்றல் (Static Energy)

இவை இரண்டும் ஒன்றில் ஒன்று ஊடுருவியுள்ளன என்பதையும் அணுவிஞ்ஞானம் இன்று ஏற்றுக்கொண்டுள்ளது.

அறிவியலின் தொட்டிலாகிய மெய்யியலில் இச்சிந்தனையே வேறுபட்ட தொனிப்போடு இரண்டுவகையாகச் சுட்டப்பட்டது.

01. பிரபஞ்ச இயற்கையின் இருப்பும் அதன் அத்தனை நிகழ்ச்சிகளும் மாற்றத்திற்குரியவை. மாற்றமே இயற்கையின் இருப்பும் இரகசியமும் என்பது ஒருவகை.

02. பிரபஞ்ச இயற்கையின் இருப்பும் அதன் நிகழ்ச்சிகளும் முன்னரே தீர்மானிக்கப்பட்டவை. மாற்றமற்றவை, நிகழ்கின்ற மாற்றங்கள் அனைத்தும் ஏலவே ஒரு நியதியால் / நிரந்தரத்தால் தீர்மானிக்கப்பட்டவை / வகுக்கப்பட்டவை இது இன்னொருவகை.

இதில் நீலகேசியில் விபரிக்கப்பட்டுள்ள நியதிவாதம் இரண்டாவது வகைக்குரியது. இறை இருப்பை நிராகரிக்கின்ற அவைதிகப் பிரிவாகிய ஆசிவக நெறியைச் சார்ந்ததாக அது நீலகேசியில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

**நீலகேசி**

தமிழ் இலக்கிய மரபில் ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகிய இது அடிப்படையில் சமணப்பனுவலாகும். இதனைத் திருக்குறளிற்கு சமகாலத்தது என்று கருதுவாருளர். இயற்றியவர் பற்றி அறியப்படாத போதிலும் கி.பி. 10ஆம் நூற்றாண்டில் சமயவாகர வாமனமுனிவர் என்பவரால் உரைசெய்யப்பட்டதை அறியமுடிகிறது[1].

நீலகேசி எனும் சமணப் பெண்மணி சமகாலத் தமிழ்நாட்டில் நிலவிய பிற தத்துவப் பிரிவுகளை, தர்க்கம் புரிந்து வெல்வதனை விவரிப்பதே இதன் உள்ளடக்கமாகும். குறிப்பாக ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய குண்டலகேசியையும் அது சார்ந்த பௌத்த மெய்யியலையும் மறுதலிப்பதே இந்நூலின் எழுச்சிக்கான பிரதான காரணமாகக் கூறுவாருளர். இந்நூல் தருமவுரைச் சருக்கம், குண்டலகேசி வாதச்சருக்கம், அருக்கசந்திரவாதச் சருக்கம், மொக்கலவாதச்சருக்கம், புத்தவாதச் சருக்கம் ஆசிவகவாதச்சருக்கம், சாங்கியவாதச் சருக்கம், வைசேடிக வாதசசருக்கம், வேதவாதச் சருக்கம், பூதவாதச்சருக்கம் எனப் பத்து அத்தியாயங்களைக் கொண்டுள்ளது.

**ஆசீவகம்** - இது பௌத்த சமண சமயங்களைப் போல வைதிக மரபை நிராகரித்த மார்க்கமாகும்.

ஆசீவ – என்பது வாழும் முறை, ஜீவனை உண்ணாத முறை, பிறர்தயவில் வாழும் துறவு எனப் பொருள்படும்[2].

இதன் ஸ்தாபர் மற்கலி கோசலர். இவர் புத்தருக்கும் மகாவீரருக்கும் காலத்தால் முற்பட்டவர்.

"நவகதிர்" என்பது இவர்களின் மூலநூலாகும். பிற்காலத்தில் இது சமண சமயத்துடன் இயைபுற நோக்கப்படினும் ஆசீவகம் காலத்தால் முற்பட்டது[3].

நீலகேசியில் இம்மார்க்கத்தினரின் அடிப்படைக் கருத்தியல்களுள் ஒன்றாக நியதிவாதம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## நியதிவாதம்

முறை, நியதி, நியதா முதலிய பெயர்களால் இது தமிழ் இலக்கியமரபில் சுட்டப்பட்டுள்ளது. பிரபஞ்ச இயற்கையில் நிகழும் அனைத்தும் முன்னரே தீர்மானிக்கப்பட்டபடியே நடைபெறுகின்றன, நடைபெறும். அத்தகைய தீர்மானிக்கும் ஆற்றலே நியதி ஆகும். பிரபஞ்சத்திலுள்ள உயிருள்ளன, உயிரற்றவை இவற்றின் சாகியங்கள், இவற்றின் இருப்புக்கான காலநீட்டம், பண்புகள், அப்பண்பு மாற்றங்கள் என யாவுமே நியதியினால் தீர்மானிக்கப்பட்டவை, வரையறுக்கப் பட்டவை.

ஓர் உயிர் கருவுறும்போதே அவ்வுயிர் உறும் மாற்றங்களனைத்தும் நியதியால் நியமிக்கப்பட்டு விடுகின்றன. இவ்வாறு தீர்மானிக்கின்ற ஆற்றலே நியதி ஆகும். அது கடவுளல்ல, கடவுளின் ஆற்றலுமல்ல. அது இயற்கையின் ஆற்றல் ஆகும்.

நியதிவாதத்தின் தடயங்களை தமிழ் இலக்கியமரபில் புறநானூற்றிலிருந்து அவதானிக்கமுடிகிறது. புகழ்பெற்ற கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று தொடங்கும் பாடலில் இடம்பெற்றுள்ள,

*"கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று*
*நீர்வழிப்படூஉம் புணைபோ லாருயிர்*
*முறைவழிப் படூஉம் என்பது"*[4]

என்ற அடிகளில் இடம்பெற்றுள்ள "முறைவழி" என்பது நியதியைச் சுட்டுவதாகும்.

மணிமேகலையில் சமயக்கணக்கர் தம் திறங்கேட்ட காதையிலும் ஆசீவகவாதியின் கூற்றாக

*"பெறுதலும் இழத்தலும் உறுதலும்*
*உறும் இடத்தெய்தலும் துக்கசுகம் உறுதலும்*
*கருவிற் பட்ட பொழுதே கலக்கும்"*[5]

என அமைந்த பாடல் அடிகளிலும் நியதிவாதத்தின் செல்வாக்கை அவதானிக்க முடிகிறது.

நீலகேசியைப் பொறுத்தவரையில் நீலகேசியானவள் குக்குடமாநகரிற்கு சமதண்டம் சென்று ஆசீவகர்களைச் சந்தித்து அவர்களிற் சிறந்தவனாகிய பூரணனிடம் சமயக் கோட்பாடுகளைக் கேட்டறிவதாக அமைந்துள்ள 54 பாடல்களில் (668-721) நியதிவாதத்தினை நேரடியாக அடையாளங்காண முடிகிறது.

*"காரணம் வேண்டா கடவுட் குழாந்தனில்*
*பேருணர் வெய்திப் பெரிதும் பெரியவன்*
*பூரணன் என்பான்."*[6]

என பூரணனை அறிமுகப்படுத்துகிற போது "காரணம் வேண்டா கடவுட் குழாம்" என்ற அடி, கருத்தூன்றி நோக்கப்படவேண்டியது. ஏனெனில் நியதிவாதிகள் காரண காரியத் தொடர்பை ஏற்பதில்லை.

பருத்திச்செடி ஆகிய காரணமே பருத்திநூலாகிப் பின் ஆடையாகிய காரியமாகப் பரிணாமம் உற்றது. இவ்வாறே மண் ஆகிய காரணம் பானை ஆகிய காரியமாகப் பரிணாமமுற்றது.

இவ்விதமாகப் பிரபஞ்ச உற்பத்தியில் காரண காரியத் தொடர்பை ஏற்றுக் கொள்பவர்கள் சத்காரியவாதிகள். சாங்கியர்கள், சைவ சித்தாந்திகள் இத்தகையோரே நியதிவாதம் பேசும் ஆசீவகரோ காரியங்களுக்குப் பின்னால் எந்தக் காரணங்களும் கிடையாது என்று வாதிடுவர். ஆனால் நீலகேசியின் பிறிதோர் பாடலில்,

"எப்பாலுந் தான்கெடா இல்லனவுந் தோன்றா"[7] எனவும்,

பிறிதொரு பாடலில் "இல்லாது தோன்றா கெடா உள்ளன"[8] என்றும் பூரணனின் கருத்தியல் அமைவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளது கெடாது இல்லது தோன்றாது என்பதே இதன் எளிமையான விளக்கம். அவ்வாறாயின் இது சற்காரியவாதமன்றி வேறென்ன என்ற ஆச்சரியம் தோன்றாமலில்லை. ஆனால் நுணுகி நோக்கும் போதே உண்மை புலனாகிறது. அதாவது சத்காரியவாதிகள் மூலப்பொருள் அடையும் மாற்றத்தை ஏற்றுக்கொள்வர் (பரிணாமம்) ஆனால் அந்த மாற்றத்தால் / பரிணாமத்தால் விளைந்த காரியப்பொருளானது ஏலவே தனது காரணப்பொருளில் சூக்குமவடிவில் இருந்தாலொழிய வெளிப்படாது என்பதே அவர்களின் நிலைப்பாடாகும்.

ஆனால் நியதிவாதிகளோ மூலப்பொருட்கள் அடையும் பரிணாமத்தை நிராகரிப்பதுடன் சத்காரியவாதிகள் கருதுவது போல பிரபஞ்ச இயற்கையானது ஒரு குறித்த மூலப்பொருளில் (காரணம்) இருந்து தோன்றியது என்பதனையும் நிராகரிக்கின்றனர். இதனைக் கருத்திற்கொண்டே, "காரணம் வேண்டா கடவுட்குழாம்" என அவர்கள் நீலகேசியால் சுட்டப்படுகின்றனர்.

*"நிலம் நீர் எரி காற்று உயிரின் இயல்பும்*
*பலநீர் அவற்றின் படுபால் அவைதாம்"[9]*

*"நுண் பொருள் ஐந்தியல் பாயவை"[10]*

நிலஅணு, நீர்அணு, தீஅணு, காற்றணு, உயிர்அணு எனும் 5வகை அணுக்களால் கூடி உருவான இயற்கை என்றுமே நிலைபேறுடையது. அவை ஒன்றுடன் ஒன்று கூடிப் பிரிவதில்லை என்தே நியதிவாதிகளின் பிரபஞ்ச இயற்கை பற்றிய நிலைப்பாடாகும். இதனையே,

*"உணன் மேயினும் உட்புகுதல் உரையேம்"*
*"புணர்தரா ஒன்றிற் புக்கென்று"*[12]

ஆகிய அடிகள் உணர்த்தியுள்ளன.

ஆசீவகத்தில் காழ்பாடு என்ற கோட்பாட்டால் பிரபஞ்சக் கட்டுருவாக்கம் விளக்கப்படுகிறது. (கட்டுரைத் தலைப்பைக் கவனத்திற்கொண்டு விரிவஞ்சி இது விளக்கப்படவில்லை.)

இவ்வாறு உருவான பிரபஞ்ச இயற்கையின் நிகழ்ச்சியொழுங்குகள் நால்வகை நியதிகளுக்கு உட்பட்டவை. இதனை "சாதுவா நியதம்" என நீலகேசி குறிப்பிடுகின்றது.

### சதுவா நியதங்கள்

பிரபஞ்ச இயற்கையில் ஒரு பொருள் உண்டாவது, அது உண்டாகும் வகை, அது உண்டாகும் அளவு, உண்டாகும் காலம் என்ற நான்கு அம்சங்களையும் நியதியின் பாற்பட்டதாகக் கருதுவதே சதுவா நியதங்களின் விளக்கமாகும்.

இதனை

*"அதுவா வதுவும் அதுவாம் வகையும்*
*அதுவாந் துணையும் அதுவாம் பொழுதுஞ்*
*சதுவா நியதந் தனவா வுரைத்தல்"*

என நீலகேசி குறிப்பிடுகிறது[12]. அவையாவன,

1. ஆவது ஆகும்.
2. ஆம் ஆங்கு ஆம் (ஆகும் முறைப்படி ஆகும்)

3. ஆந்துணை ஆம் (ஆகும் அளவு ஆகும்)

4. ஆம் பொழுது ஆம் (ஆகும் காலத்து ஆகும்)

நீலகேசியில் இந்நான்கு நியதிப்பிரிவுகளும் "ஒரு பெண்சிசு அரிவைப்பருவத்தை அடைதல்" என்ற ஒரே இயற்கை நிகழ்ச்சியை உதாரணங்காட்டி விளக்கப்பட்டுள்ளமை சிறப்பானதாகும்.

1ஆம் நியதி - ஆவது ஆகும்:-

எப்பொருள் எங்ஙனம் உருவாக வேண்டுமோ- அப்பொருள் அங்ஙனம் ஆக்கம் பெறும். அதாவது பிறந்த ஒரு குழந்தை ஆணாக இருப்பின் அது அரிவையாக ஆகாது.

பெண் சிசுவாக இருப்பின் அது வயது வந்ததும் அரிவைப்பருவத்தாள் ஆகும். இதனையே "அரிவையள் ஆம் குழவியவள்"[13] என நீலகேசி குறிப்பிடும்.

2ஆம் நியதி - ஆம் ஆங்கு ஆகும்.

இது முதலாம் நியதியின் தொடர்ச்சிப் படிநிலை ஆகும். முற்சுட்டப்பட்ட பெண்குழந்தையினை முறைப்படி நல்லூட்டமான உணவு கொடுத்து வளர்த்துவரின் அது அரிவையாக வளர்ச்சிபெறும் என்பதே இந்நியதியின் விளக்கமாகும். இதனை,

"அரிவையள் ஆம் குழவியவள்
உரிய வகையில் உவந்தாங்கு எடுத்தல்"[14]

என்ற அடிகளால் நீலகேசி விளக்கியுள்ளது.

3ஆம் நியதி -ஆந்துணை ஆம் (ஆகும் அளவு ஆகும்.)

குறித்த குழந்தையின் வளர்ச்சி எந்த அளவு அமைய வேண்டுமோ அந்த அளவு அமையும் என்பதே இந்நியதியாகும்.

பெண்சிசு உரியமுறையில் வளர்க்கப்பெற்றால் அதன் அரிவைப்பருவத்தில் மும்முழ உயரம் எய்துதல் பொது எல்லையாகும்.

இதனையே, *"அரிய முழம் மூன்றளவாம் பொழுதும்"*[15] என நீலகேசி குறிப்பிடுகின்றது.

4 ஆம் நியதி - ஆம் பொழுது ஆம் (ஆகும் காலத்து ஆகும்)

எப்பொழுதும் வளர்ச்சிபெறுவதற்கு ஒரு குறித்த காலப்பிரமாணம் உள்ளது. குறித்த பெண்சிசுவுக்கு எவ்வளவு ஊட்டச்சத்து கொடுத்து வளர்க்கப்படினும் "அரிவை" என்ற நிலையை எய்த குறித்த காலம் அவசியமாகும். இதனையே நீலகேசி

"அரிய முடிமூன்றளவாம் பொழுதும்
வரிசை உரைத்த வருடம் அதன்பின்
அரிவையாவளாங் குழவி"[16]

எனக் குறிப்பிடும்

ஆசீவகர் காலத்தையும் நியதியுள் அடங்கிய ஒரு பிரிவாக குறிப்பிடுவது இங்கு அவதானிக்கத்தக்கது.

இது மட்டுமன்றி கன்மம் / விதிபற்றிய கருத்தையும் நியதியுள் அடங்கியதாகவே நியதிவாதிகள் குறிப்பிடுகின்றனர். ஒருவன் அனுபவிக்கின்ற இன்பதுன்பங்களுக்கு அவன் செய்த கன்மமே காரணம் என்பதனை இவர்கள் ஏற்பதில்லை.

ஒரே ஆற்றலுடைய இருவர் புரியும் ஒரே வினையானது ஒருவருக்கு இன்பத்தையும் மற்றவருக்கு துன்பத்தையும் தருவதால் வினைகள் பயன்கொடுக்கவில்லை, நியதிப்படியே இவை விளைகின்றன என்பது அவர்கள் கருத்தாகும்.

எந்தச் செயலும் வினைகளால் தீர்மானிக்கப்படவில்லை. ஆதலால் மனித முயற்சிகள் பயனற்றவை. வலியோர், மெலியோர் என அனைவரும், பிரபஞ்சப் பௌதீகமும் நியதிக்கும் அதன் வெளிப்பாடாகிய எதேச்சை சுபாவங்களுக்கும் கட்டுப்பட்டவை. முள்ளின் கூர்மையும்

விலங்கு பறவைகளின் வெவ்வேறுபட்ட குணாதிசயங்களும் சுபாவத்தினால் அமைந்தவை. ஆனால் நீலகேசியில் கூறப்பட்டுள்ள ஆசீவகரின் "சுபாவம்" உலோகாயதர்களின் சுபாவக் கொள்கையைப் போலத் தன்னியல்புடையது அன்று. அது நியதியினால் விதிக்கப்பட்டது.

சுற்றப்பட்ட ஒரு நூற்செண்டானது உருண்டு நீண்டு செல்லும் அளவு வரையறுக்கப்படுவது போல பிரபஞ்சத்தின் கூறுகள் யாவும் எப்பொழுதோ வரையறுக்கப்பட்டவை என்பதனையே நியதிவாதம் திட்டவட்டமாக வலியுறுத்துகிறது.

## நிறைவாக

நீலகேசியில் "பூரணன்" வாயிலாக விவரிக்கப்பட்டுள்ள நியதிவாதம் ஆசீவகச் சார்புடையது. அது வைதிக மரபை நிராகரிக்கிறது.

பிரபஞ்சஇருப்பு, அதன் செயலொழுங்கு பற்றிய காரண காரிய விளக்கங்களை நியதிவாதம் ஏற்பதில்லை. அவ்வகையில் சத்காரிய, சத்காரண, வாதங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இயற்கையின் உருவாக்கம் குறித்த அணுக்கொள்கையும் சுபாவவாதமும் நியதிவாதிகளால் முன்வைக்கப்பட்டுள்ளன.

அணுக்கொள்கை குறித்து வைசேடிகம் கூறியிருப்பினும் அவர்களின் "அதிர்ஷ்டம்" பற்றிய கருத்தியல் நியதிவாதிகளால் நிராகரிக்கப்பட்டுள்ளது. நியதியால் நிர்ணயம் செய்யப்படுகின்ற "காழ்ப்பாடு" விதியின் அடிப்படையில் அணுக்கள் இணைவதாக நீலகேசி குறிப்பிடுகிறது. லோகாயதர்களும் இயற்கையின் உருவாக்கம் பற்றிய சுபாவவாதத்தை முன்மொழிந்திருப்பினும் நீலகேசியில் நியதிவாதிகளால் பேசப்பட்டுள்ள சுபாவவாதம் அதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும்.

நீலகேசி இதனை சாதுவா நியதங்களின் அடிப்படையில் விளக்கமுற்பட்டுள்ளது. பிரபஞ்ச இயற்கையின் உயிர், சடப்பொருட்களின் தோற்றம், இருப்பு, அளவு / எண்ணிக்கை, நிலைபெறும் காலம் ஆகிய

விடயங்கள் சதுவாரியதங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுவதாக நீலகேசி குறிப்பிட்டுள்ளது.

வைதிக சமயங்களில் மட்டுமன்றி பௌத்தம், சமணம் ஆகிய அவைதிக சமயங்களிலும் அதிகம் சிலாகித்துப் பேசப்படுகின்ற கன்மக்கொள்கையின் "தீர்மானிக்கும் ஆற்றலை" நியதிவாதிகள் மறுதலிக்கின்றனர்.

நியதிவாதம் இலக்கிய மரபில் சமயங்கடந்ததொரு உளச்சீர்மியத்திற்கான கருத்தியலாக தொன்றுதொட்டு நிலவி வருகிறது. வாழ்வின் துன்பங்களால் சலித்து ஓய்ந்துபோன சந்தர்ப்பங்களில் குறித்த ஒரு குழுவினரின் கூட்டு நனவிலிக்கு ஆறுதல் கொடுத்துத் தேற்றவல்ல ஏற்பாடாகவும் இதனைப் பிரயோகிக்க முடியும்.

இயங்கியலையும் மனிதமுயற்சிகளையும் நிராகரிக்கின்ற காரணத்தால் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பாதகமானதொரு கோட்பாடு என்ற விமர்சனங்களும் இது குறித்து எழாமலில்லை.

ஆயினும் இதற்குள் பல நல்ல விடயங்களும் காணப்படுகின்றன. ஆசைகளால் விளையும் போர்கள் இல்லை. வர்ணாசிரம நியமங்கள் இல்லை. உலக சகோதரத்துவத்திற்கு இது வித்திடவல்லது. உலக வாழ்வின் மேடுபள்ளங்களைத் துணிகரமாக எதிர்கொள்வதற்கான மனோபலத்தை நியதிவாதம் வழங்கவல்லதாயுள்ளது.

மேலும் பூர்வீகத் தமிழ்மக்களின் அண்டவியல் பற்றிய கூர்த்த மதிநுட்பத்தினை விளக்கவல்ல ஒரு நெறியாகவும் இது உள்ளது.

"அண்ட அமைப்பும் அணுவின் கொள்கையும் உய்யும் வழி உரைக்கும்" இயற்பியல் சார்ந்த நெறியாகவும் இது தன்னை இனங்காட்டியுள்ளது. பழந்தமிழ் நாட்டிலும் வடநாட்டிலும் மிகச் சிறந்த வானியலாளர்களாகவும் காலக்கணிதர்களாகவும் விளங்கியவர்கள்

நியதி வாதத்தில் நம்பிக்கையுடையோர்களாக இருந்துள்ளனர். வடநாட்டில் பிருஹத்சம்ஹிதையை எழுதிய வராஹமிஹிரர் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக வல்லவர்.

பழந்தமிழ் நாட்டில் புகழ்பெற்ற "யாதும் ஊரே" எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடலில் நியதிவாதம் பேசிய பூக்குன்றனாரும் மிகச் சிறந்த காலக்கணியராக இருந்தமையினாலேயே அவருக்கு "கணியன்" என்ற அடைமொழி வழங்கியமை கவனிக்கற்பாலது.

மொத்தத்தில் மாற்றமே மாற்றமுடியாதது என்பதற்கு மறுதலையாக "மாற்றமுடியாததால்" விளைந்த, விளைகின்ற விளையவுள்ள மாற்றங்களே பிரபஞ்ச இயற்கை என்ற சிந்தனைப்போக்கே நியதிவாதத்தின் அடிப்படை எனலாம்.

## அடிக்குறிப்புக்கள்

1. அப்பாத்துரைப்பிள்ளை, கா., 2003, **நீலகேசி (உரைநூல்)**,பூம்புகார்ப் பதிப்பகம், ப.3
2. கந்தசாமி, சோ.ந.,2003,**இந்திய தத்துவக் களஞ்சியம்-I**,மெய்யப்பன்பதிப்பகம் ப.103.
3. **மேலது**
4. புறநானூறு, பாடல்:192
5. மணிமேகலை 159-162
6. நீலகேசி,பா.668
7. மேலது 696
8. மேலது 698
9. மேலது 675
10. மேலது 671
11. மணிகேலை 27.168
12. நீலகேசி,பா704
13. மேலது 705-1
14. மேலது 705-1-2
15. மேலது705-3
16. மேலது705